அனுப்புநர்
திரு.இரா.சு.மாரியப்பன், பி.இ., எம்.பி.ஏ.,
உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
சேவியர் காலனி, தெற்குபுறவழி சாலை,
திருநெல்வேலி - 627 005
e-mail:tveli.lpa@gmail.com
www.nellai.tn.nic.in/tlpa
தொலைபேசி எண் :0462-2350040

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்,
பாளையங்கோட்டை.

---

ந.க.எண்.854/2019 (1) திஉதிகு

நாள்.30.09.2019

அய்யா,

**பொருள்:** மனைப்பிரிவு - திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் - பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - தருவை ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண். 1071/2A1B மற்றும் 1071/2A3-இல் 2627.00 ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

**பார்வை :**

1. மனுதாரர் திருமதி.P.முருகம்மாள் அவர்களின் விண்ணப்பம் நாள்.30.04.2019 மற்றும் 25.09.2019
2. திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் எண்.25, நாள்.22.02.2019
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.4417/2017/எல்ஏ1 நாள்.14.07.2017.
4. வட்டார வளர்ச்சி அலுவலர் பாளையங்கோட்டை அவர்களுக்கு முகவரியிட்ட இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.14.06.2019.
5. அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை வழங்கல் துறை, நாள்.16.08.2003.
6. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019
7. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை அவர்கள் கடிதம் ந.க.எண்.3147/19 ஆ6 நாள்.06.09.2019
8. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் கடிதம் எண். மே.பொ/திமிபவ/திலி/உ.செ.பொ/சிவில்/ அ.எண்.19/2019 நாள்.07.09.2019
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.14085/12 எல்ஏ1, நாள்.15.5.2013

---

பார்வை 1–ல் சுட்டியுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட இம்மனைப்பிரிவின் ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

திருநெல்வேலி உள்ளூர் திட்டப்பகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தருவை ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண். 1071/2A1B மற்றும் 1071/2A3-இல் 2627.00 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கிட ஏதுவாக பார்வை 4-ல் கண்டுள்ள கடிதத்துடன் அனுப்பப்பட்ட சாலை வரைபடத்திற்கேற்ப தார் சாலைகள் அமைக்கப்பட்டு, பார்வை 7-ல் கண்டுள்ள கடிதம் மூலம் தானப்பத்திரம் பெறப்பட்டதைத் தொடர்ந்து நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல்

P. Murugammal

Scanned by CamScanner

வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ திஉதிகு எண்.42/2019** என எண்ணிடப்பட்டு வரைபட நகல்கள் இரண்டு மேல்நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண்.16-ன்படி சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தினை தானபத்திரம் மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு பார்வை 7-ல் கண்டுள்ள கடிதம் மூலம் விபரம் பெறப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19 (உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது பார்வை 9-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மேற்காண் மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகளின் தரத்தினை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை அவர்களால் உறுதி செய்தும், மனைப்பிரிவு நிபந்தனை எண்.19 (ஈ)—ன்படி, அவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளளப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொறுப்பு), 30.9.19
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
திருநெல்வேலி

30/9/19

**இணைப்பு:**
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு
நிபந்தனைகள் 2 தொகுப்புகள்

நகல்
1. வைப்பறை
(உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் நிபந்தனைகளுடன்)
2. திருமதி.P.முருகம்மாள்,
க/பெ.திரு.சு.பரமசிவன்,
95, சாலைத்தெரு,
வண்ணார்பேட்டை,
திருநெல்வேலி - 627 003
} உத்தரவு கடிதம் மட்டும்

P. Murugammal

Scanned by CamScanner

உறுப்பினர் செயலர் (பொறுப்பு) , திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்
திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு.இரா.சு.மாரியப்பன், பி.இ., எம்.பி.ஏ

ந.க.எண்.854/2019 (2) தி.உ.தி.கு. நாள்.30.09.2019

**பொருள்:** திட்ட அனுமதி - திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமம் - பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் - தருவை ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்.1071/2A1B மற்றும் 1071/2A3-இல் 2627.00 ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 49–ன் கீழ் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது– தொடர்பாக.

**பார்வை:**

1. மனுதாரர் திருமதி.P.முருகம்மாள் அவர்களின் விண்ணப்பம் நாள்.30.04.2019 மற்றும் 25.09.2019
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பாளையங்கோட்டை அவர்கள் கடிதம் ந.க.எண்.3147/19 ஆ6 நாள்.06.09.2019
3. திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் எண்.25, நாள்.22.02.2019
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.4417/2017/எல்ஏ1 நாள்.14.07.2017.
5. அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை கடித எண்.19113/நவ4(3)/2017 நாள்.30.08.2017.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்எ1 நாள்.08.09.2017.
7. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் கடிதம் எண்.மே.பொ/திமிபவ/திலி/உ.செ.பொ/சிவில்/அ.எண்.19/2019 நாள்.07.09.2019

**ஆணை:**

திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தருவை ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண். 1071/2A1B மற்றும் 1071/2A3-இல் 2627.00 ச.மீ குடியிருப்பு மனைப்பிரிவுக்கு **ம.வ/திஉதிகு எண்.42 /2019** என எண்ணிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு **1971-ம்** ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 49-ன் கீழ், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடங்களுக்கு **தி.அ/ம.வ/தி.உ.தி.கு. எண். 46/2019** என்று எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

உத்தேச உபயோகம் -குடியிருப்பு மனைப்பிரிவு

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான

P. Murugammal

Scanned by CamScanner

தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன். தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

2. பார்வை 5-இல் கண்ட அரசு கடிதத்தின் படி"உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்."

**நிபந்தனைகள்:**

1. இம்மனைப்பிரிவுக்கு விரிவு அபிவிருத்தி திட்ட விதிகள் மற்றும் கட்டிட விதிகள் அனைத்தும் பொருந்தும்.
2. மனைப்பிரிவு அனுமதி தொடர்பாக வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்களிடம் தனியாக உரிமம் பெறப்பட வேண்டும்.
3. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112. Housing and Urban Development Department dated:22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite person to purchase in any manner any plot, apartment or building as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority."
4. "This Order is passed subject to the outcome of the writ petition WP(MD)No.8948 of 2019"
5. Tamilnadu Combined Development and Building Rules 2019 விதி 11-இன் படி

   The Permission granted by the competent authority shall not mean responsibility or clearance of the following aspects,

   1. Title or ownership of the site or building
   2. Easement Rights.
   3. Structural Reports, Structural Drawing and structural aspects. The Registered Architect or Register Engineer and Structural Engineer on record as the case may be, shall be responsible for defects in the design.
   4. Workmanship, soundness of structure and materials used.
   5. Quality of building services and amenities the construction of building.
   6. Other requirements or licenses or clearances required for the site or premises or activity under various other laws.

30/9/19

உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
திருநெல்வேலி.

30/9/19

பெறுநர்: வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்,
பாளையங்கோட்டை.

**நகல்:**

1. வைப்பறை (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் நிபந்தனைகளுடன்)
2. திருமதி.P.முருகம்மாள்,
   க/பெ.திரு.சு.பரமசிவன்,
   95, சாலைத்தெரு,
   வண்ணார்பேட்டை,
   திருநெல்வேலி - 627 003

   } உத்தரவு கடிதம் மட்டும்

P. Murugammal

Scanned by CamScanner